முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**எதிர்காலம் குறித்த**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வு குறித்த**

**மகான் சுப்பிரமணியரின் ஆசி நூல்**

**(விளம்பி மார்கழி மாதம் 22ம் திகதி முதல் மார்கழி மாதம் 29ம் திகதி வரை**

**ஜனவரி 6ம் திகதி முதல் ஜனவரி 13ம் திகதி வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. **தருமபலம் கொண்ட தமிழகமே**
   **தன்னார்வ தொண்டு பலமும்**
   **ஒருமைப்பாடு மிகுந்த பரதமே**
   **உயர்வான இந்தியா தமிழகத்தில்**
2. **தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக**
   **தக்க விளம்பி சிலை திங்கள் தன்னில்**
   **நேமமுடன் இருபானீர் திகதி மேல் இருபான் நவதிகதி வரை**
   **(விளம்பி வருடம் மார்கழி மாதம் 22ம் நாள் 06.01.2019, ஞாயிறு முதல் மார்கழி மாதம் 29ம் நாள் 13.01.2019, ஞாயிறு முடிய)**
   **நிலமதனில் எதிர்கால பலன் குறித்த**
3. **குறித்த நல் வார ஆசிதன்னை**
   **கூறிடுவேன் சுப்பிரமணியர் யானும்**
   **அறியவே இயற்கை வளங்கள்**
   **அறம் பெருகவே ஏற்பட நேரும்**
4. **நேருமைபட மக்களை காக்கும்**
   **நீதி அரசாக சேவை பெருகவே**
   **வறுமை கஷ்டம் இல்லாத**
   **வளமான நிலை தமிழகம் பெறும்**
5. **பெருமை மிகுந்த ஆளுமையாக**
   **பொருளாதார வளமும் கூடும்**
   **தருமமுடன் நேருமை குன்றா**
   **தக்க பாதுகாப்பான சூழலுக்கு**
6. **சூழலுக்கு அதிகார வர்க்கங்கள்**
   **சேவை மனப்பான்மைக்கு வந்து**
   **ஊழலில்லா துறையை வளர்க்க**
   **உயரும் தமிழக இந்திய பொருளாதாரம்**
7. **பொருளாதார சீர்கேடு தரும்**
   **பிரச்சனைகள் தரும் திட்டங்களில்லா**
   **வருங்கால வளர்ச்சி திட்டமாக**
   **வாழ்வாதார பாதிப்பு தரா வண்ணம்**
8. **வண்ணமுடன் சிறப்பு திட்டங்களை**
   **வகுக்கவே மேலும் கீழுமான அரசு**
   **மண்ணுலகில் வளரும் உயரும்**
   **மக்களை வருத்தும் வரிச்சுமை**

9. வரிச்சுமை கூடினால் ஆளுமைக்கு
வலுவில்லை நம்பகமில்லை என
இருப்பிடம் தெரியா போக நேரும்
இந்தியா தமிழகம் உயர வளர

10. வளரவே வடிவேலன் வழிபாட்டுக்கு வந்து
வள்ளலான அரங்கன் தரும நெறி
மலரவே சமூக சமுதாய நிலைகள் மாற
மண்ணுலகே ஞான ஆட்சி பெறும் வார ஆசி நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் சுப்பிரமணியர் அருளிய வார ஆசி நூலின் சாரம் :

விளம்பி வருடம் மார்கழி மாதம் 22ம் நாள் 06.01.2019, ஞாயிறு முதல் மார்கழி மாதம் 29ம் நாள் 13.01.2019, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்க இருக்கும் நிகழ்வுகள்

தருமத்தின் பலத்தினை பெற்றிட்ட தமிழகமே தன்னார்வ தொண்டு பலமும் ஒருமைப்பாடும் மிகுந்த பாரததேசத்திலும் இந்த வார நிகழ்வுகளாக விளம்பி வருடம் மார்கழி மாதம் 22ம் நாள் 06.01.2019, ஞாயிறு முதல் மார்கழி மாதம் 29ம் நாள் 13.01.2019, ஞாயிறு முடிய உள்ள காலத்தில் நடக்கின்ற நிகழ்வுகளை வார ஆசி நூலாக சுப்பிரமணியர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

நாட்டினில் தர்மம் பெருகினால்தான் இயற்கை வளங்கள் உண்டாகும். நாட்டை ஆளும் அரசு சார்ந்தவர்கள் எல்லாம் நீதிமிக்க அரசாக, அரசாட்சி செய்து, நீதி அரசர்களாக நடந்து தொண்டுகளை செய்திட வேண்டும்.

சேவைகள் பெருகிட பெருகிட வறுமை நீங்கும், கஷ்டங்கள் இல்லாத நிலை உருவாகும், வளம்மிக்க நிலையினை தமிழகம் பெற்றிடும்.

பெருமைமிகுந்த ஆட்சியாக மக்கள் சொல்லும்படியான வளமை நிலையை தமிழகம் பெறும், நாட்டினில் பொருளாதார வளங்கள் பெருகிடும், தருமங்கள் செய்வதுடன் நேர்மை குன்றாத தக்க பாதுகாப்பான சூழ்நிலைக்கு ஆட்சி பொறுப்பிலும் அதிகாரத்திலும் உள்ள மக்களெல்லாம் சேவை செய்கின்ற தொண்டு மனப்பான்மை வந்து ஊழல் இல்லாத துறையாக அவரவரும் வளர்த்திட தமிழகத்தின் பொருளாதாரமும் இந்தியாவின் பொருளாதாரமும் உயர்வடையும்.

பொருளாதார சீர்கேடுகளை தருகின்ற திட்டங்கள் இல்லாமல், பிரச்சனைகளை உண்டாக்கும் திட்டங்கள் இல்லாமல், வருங்கால வளர்ச்சிக்கு உகந்த திட்டமாக மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாமல் இயற்றி, சிறப்பான திட்டங்களை வகுத்திடவே மாநில மத்திய அரசும் வளர்ந்திடும் உயர்வடைந்திடும்.

மக்களை வாட்டி வதைக்கும் வரிச்சுமை அதிகரித்தால் ஆட்சியாளர்களுக்கு ஆட்சியில் வலு இருக்காது, நம்பிக்கை இல்லை என்றே கூறி ஆட்சியில் உள்ளோர் இருக்கும் இடம் தெரியாமல் போக நேரும்.

இந்தியாவும் தமிழகமும் நிலை உயர உயர நல்லவை நடக்கும், நாடெங்கும் மக்களெல்லாம் முருகப்பெருமானின் வழிபாட்டிற்கு வந்திட வள்ளல் ஞானி ஆறுமுக அரங்கனின் தருமநெறி உலகினில் மலர்ந்திட சமுதாய சமூக சூழ்நிலைகள் எல்லாம் மாறி இப்பூவுலகே ஞானஆட்சியினை பெறும் என தமது வார ஆசி நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

–சுபம்–